திகதி: 07.03.2024

## உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது உயர் செல்வமுடைய தனியாட்களை (HWIs) உன்னிப்பாக கவனித்துவருகின்றது

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது ,எதிர்காலத்தில் உயர் செல்வந்தர்களின் வரி இணக்கப்பாட்டினை மிகக் கவனமாக கண்காணித்துவருவதற்கு எதிர்பார்த்துள்ளது. பாரிய வரிசெலுத்துநர்கள் அலுவலகத்தில் அமைந்துள்ள உயர் செல்வமுடைய தனியாள் அலகிற்கு, உயர் - வருமானம் மற்றும் உயர்-செல்வமுடைய தனியாட்களின் மீது கவனம் செலுத்த மேலதிக மனிதமாற்று தொழில்நுட்பம் கிடைக்கப்பெற்றுள்ளது .இது உயர் செல்வந்தர்கள் தங்களது நியாயமான பங்கினை வழங்குதையும் சரியான வரித் தொகைகளை செலுத்துதையும் உறுதிசெய்வதன் மூலம் இலங்கையின் வரி நிருவாகத்தின் மீது நேர்மை மற்றும் நம்பிக்கையை மீட்டெடுப்பதற்கான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் முயற்சிகளில் இது ஒரு பகுதியாகும் .
முதற் படியாக ,உயர் செல்வமுடைய தனியாள் அலகானது ,தெரிவுசெய்யப்பட்ட எண்ணிக்கையான செல்வந்த தனியாட்களை தொடர்புகொள்வதுடன் அவர்கள் தங்கள் கோப்புகளை கோப்பிடுகின்றதை உறுதி செய்ய அவர்களுடனும் அவர்களது ஆலோசகர்களுடனும் இணைந்து தொழிற்படும் .கோப்பிடுதல் செய்ற்பாட்டின் ஆரம்ப நிலையிலேயே ஏதேனும பிழைகள் அல்லது விடுகைகளை அடையாளம் கண்டு அதனை தவிர்ப்பதற்கும் உதவியினை நல்கும் .அதிகபட்ச கடன் காணப்படும் சந்தர்ப்பங்களில் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு உயர் செல்வந்த வரிசெலுத்துநர்கள் தொடர்பான அனைத்து நிதிக் கொடுக்கள் வாங்கள் மற்றும் ஏனையகொடுக்கள் வாங்கள் அடையாளம் காணப்படும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது ,உள்நாட்டு மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து, வரி இணக்கப்பாடு ஏற்படகூடிய சந்தர்ப்பங்களை உயர் செல்வமுடைய தனியாள் பிரிவிற்கு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுளை மேற்கொள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது 45 , நாடுகளுடனான அதன் விரிவான ஒப்பந்த வலையமைப்பினூடாக வங்கிகள் ,நிதி உளவுதுறை அலகு (FIU) மற்றும் ஏனைய வரி நிருவாகம் என்பவற்றுடன் நெருக்கமாக தொழிற்படும் இந்த இணைந்த செயற்பாடானது உயர் செல்வந்தர்களினால் வெளிப்படுத்தப்படாத வங்கி அறிக்கைகள் மற்றும் சொத்துகளை உயர் செல்வமுடைய தனியாள் அலகு அடையாளம் காண்பதற்கு உதவும்
உயர் செல்வந்தர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய குழுக்களின் வரி இணக்கப்பாட்டினை கண்கானிக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது உறுதிபூண்டுள்ளது .இந்த பங்குபற்றல் அணுகுமுறையின் ஊடாக ,நாடு எதிர்கொள்ளும் சிக்கலான சமூக – பொருளாதார பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கு அரச வருமானத்தை சேகரிக்கும் முயற்சியில் பங்குபற்றுவதற்கும் பங்களிப்பதற்குமான அவர்களின் விருப்பத்தை மேம்படுத்தும் என நாங்கள் நம்புகின்றோம்

திருமதி.டபிள்யூ.ஏ.எஸ். சந்திரசேகரா
ஆணையாளர் நாயகம்
உள்நாட்டு இறைவரி திணைக்களம்

W.A. Sepalika Chandrasekara
Commissioner General of Inland Revenue
Inland Revenue Department
Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 02.

கே. & பதி.:

1- **எத்தனை நபர்கள் உயர் செல்வமுடைய தனியாள்** (HWIs) **அலகில் அர்ப்பணிப்புடன் உள்ளனர்?**

அ. HWIs அலகில் தற்போது 10 பேர் உள்ளனர். அந்த அலகானது கணக்காய்வு, சட்டம், பாரிய வரிசெலுத்துநர் கணக்காய்வு மற்றும் புள்ளிவிபரங்களில் தொழில் நிபுணத்துவமுடையோரைக் கொண்டுள்ளது.

2- HWIs **களை எவ்வாறு வரையறுப்பீர்கள்**?

அ. தற்போது HWIs கள் வரையறுக்கப்படவில்லை. வரி நிருவாகத்தில் வரையறையானது மாறுபடுகின்றது. உயர் செல்வமுடைய தனியாள் அலகானது உயர் செல்வந்தர்கள் பிரிவின் வருமானம், சொத்துக்கள் மற்றும் திட்டமிடல் தந்திரோபாயங்களை விளங்கிக்கொண்டதன் பின்னர் குறு எல்லைகள் மட்டம் அடையாளம் காணப்படும். தற்போது, HWIs அலகானது பல்வேறு வகைகளிலிருந்தும் உயர்சொத்தை அறிக்கையிட்ட வரிசெலுத்துநர்கள் தொடர்பாக கவனம்செலுத்துவதுடன் அனைத்து தற்போது .HWIs ஆட்களாக இருக்கத்தக்க ஆட்களது சொத்துக்கள் மற்றும் ஏனைய வருமான மூலங்களை அடையாளம் காண்பதற்கு மூன்றாம் திறத்தினர் அடங்கலாக ஏனைய தரவு மூலங்களையும் அது ஆராய்கின்றது. (வீட்டு மனை, நிதி உளவுத்துறை அலகு தரவு, வங்கி கணக்கு தகவல்கள் மற்றும் ஒப்பந்த பங்காளர்களிடம் பெற்றுக்காள்ளும் தகவல்கள்)

3- HWIs அலகில் **எத்தனை பேர் உள்ளனர்**?

அ. HWIs அலகானது, முதல் தடவைக்கு 100 HWIs களை அடையாளம் கண்டு, அவர்களின் வருமானம், சொத்துக்கள் மற்றும் கோப்பிட்ட வரலாறு ஆகியவற்றை முழுமையாக மதிப்பாய்வு செய்யும். இந்த வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதே வேளை, மதிப்பாய்வு மேற்கொள்வதற்கும் தொடர்ச்சியாக கண்காணிப்பதற்கும், ஏனைய நபர்கள் குழுவில் சேர்க்கப்படுவார்கள்.

4- **தொடர்புடைய குழுக்கள் என்பதன் கருத்து என்ன**?

அ. HWIs களின் கட்டுப்படுத்தும் கூட்டுத்தாபனம் அல்லது தனியார் நம்பிக்கைப் பொறுப்பு அல்லது கம்பனி போன்ற எந்தவொரு தொடர்புடைய உருவகத்தை நாம் தொடர்புடைய குழுக்கள் எனகருதுவோம். மனைவி மற்றும் குழந்தைகள் போன்ற குடும்ப உறுப்பினர்களின் வரிக் கோப்பிடுதல்களையும் நாம் மீளாய்வுசெய்வோம்.

5- **அதிக இடருள்ள சந்தர்ப்பங்கள் என்று எதனை குறிப்பிடுகின்றீர்கள்**?

அ. கரைகடந்த முதலீட்டு கட்டமைப்புகள் அல்லது வருமானம் அல்லது சொத்துக்கள் என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்டவைக்கும் அறிக்கையிடப்பட்டவைக்கும் இடையிலான முரண்பாடுகள் அடங்கலாக சிக்கலான ஏற்பாடுகள் போன்ற வரி இணக்கமின்மைக்கான உயர் ஆபத்துக்களுக்கு

பங்களிக்கத்தக்க பல்வேறு காரணிகள் உள்ளன. உயர் ஆபத்துக்கள் அடையாளம் காணப்பட்ட கோப்புளை ஆழமாக ஆராயப்படும் என்பதுடன் பொருத்தமான இணக்க நடவடிக்கைகளுக்குட்பட்டதாகவும் இருக்கும்.

6- **இது ஏன் ஒரு புதிய நிகழ்ச்சித்திட்டம் அல்லது கவனம்? நீங்கள் மற்ற வரி செலுத்தநர் பிரிவுகள் போன்று** HWIs **களிலும் கவனம்செலுத்தவில்லையா? நிகழ்ச்சித்திட்டம் எவ்வாறு வேறுபட்டது?**

அ. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் முன்னர் HWIs அலகு இருந்த போதிலும், இந்த அலகின் பணிச் சுமையானது செல்வந்தர்கள் மீது மட்டும் இருக்கவில்லை என்பதுடன் HWIs இணக்க அணுகுமுறை உருவாக்கப்பட்டிருக்கவில்லை. புதிய HWIs அலகானது 10 அர்ப்பணிப்புடனான வளவாளர்களைக் கொண்டுள்ளது. அவர்கள், செல்வந்தர்கள் தங்கள் அறிக்கையிடல் கடப்பாடுகளுக்கு இணங்குவதை உறுதிசெயவதற்கு அவர்கள் மீது மட்டுமே தங்கள் கவனத்தை செலுத்துவார்கள். வளவாளர்கள், வரி, சட்டம், புள்ளிவிபரங்கள் மற்றும் பாரிய வரிசெலுத்துநர் ஆகியவற்றில் நிபுணத்துவத்துவத்தையுடையவர்கள். ஆகவே அவர்கள் HWIs பிரிவினை கையாள தேவையான நிபுணத்துவத்தைப் பெற்றுள்ளனர் ஏனை வரி நிருவாகங்களின் அனுபவமானது HWIs பிரிவின் கவனம் செலுத்துவது அவர்களது வரி இணக்கப்பாட்டின் மீது நேரடியான நேர்மறையான தாக்கத்தைக் கொண்டுள்ளது என்பதனைக் காட்டுகின்றது. ஆகவே, இந்த குழுவிற்கு சரியான வரித்தொகைகளில் இணக்கத்தை ஏற்படுத்தவும் அதனை செலுத்தவுதற்கு உதவவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது மிகுந்த கவனம் செலுத்த விரும்புகின்றது.

7- HWIs **களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு 10 நபர்கள் போதுமானவர்கள் என நீங்கள் கருதுகின்றீர்களா?**

அ. HWIs நிகழ்ச்சித்திட்டங்களுக்கு, அவர்களது HWIs இணக்க உத்தியினை உருவாக்கும் ஆரம்ப காலத்தில் சிறிய குழுக்களாக ஆரம்பிப்பது சாதாரணமாகும். ஆரம்பகட்டத்தில், HWIs வரிசெலுத்துநர் பிரிவு மற்றும் அவர்களது ஆலோசகர்களுடன் நேர்மறையாக பணியாற்றுவதற்கும், அவர்களின் இணக்கப்பாட்டினை உறுதிசெய்யும் இணைந்த அணுகுமுறையுடன் ஆரம்பிப்பதற்கும், இந்த எண்ணிக்கை உதவும் என்று நாம் கருதுகின்றோம். HWIs நிகழ்ச்சித்திட்டங்களானது, வரி அடிப்படையில் பாரிய வரி தாக்கத்தை ஏற்படுத்துவதனால், இந்தக் குழுவைக் கண்காணிக்க வேண்டியதன் அவசியத்தக் காட்டும் முடிவுகளின் அடிப்படையில் வளர்ச்சியடையும் பாங்கினை ஏனைய வரி நிருவாங்களின் முடிவுகள், காட்டுகின்றன.

8- **இந்த பிரிவிலிருந்து இன்னும் எவ்வளவு வரிகளை மதிப்பிட எதிர்பார்க்கின்றீர்கள்?**

அ. இது ஆரம்ப நிலையிலுள்ள காரத்தினால் விளைவுகள் தொடர்பில் தற்போதே ஆராய முடியாது. ஆனால் ஏனைய வரி நிருவாகங்களின் அனுபவத்தின் அடிப்படையில், எங்களது இணைந்த அணுகுமுறை மற்றும் விரிவான கணக்காய்வின் ஊடாக இந்த பிரிவிலிருந்து கணிசமான அளவு வரி இணக்கப்பாட்டினை அதிகரிக்க எதிர்பார்க்கின்றோம். ஏனைய நாடுகளின் வரி இடைவெளி பகுப்பாய்வானது, இந்த பிரிவில இருந்து கணிகமான அளவு வரி கசிவு இருப்பதை காட்டுகின்றது. நாம் தெளிவான முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை தாபிப்பதுடன், வருடாந்தம் எங்கள் முடிவுகளை அறிக்கையிடுவோம்.

9- **தங்கள் வரிகளை செலுத்துவதை உறுதிசெய்ய HWIs களுடன் எவ்வாறு கையாளுவீர்கள்?**

அ. HWIs அலகிலுள்ள வல்லுநர்கள், HWIs கள் இற்றைவரையில் அவர்கள் கோப்பிட்டுள்ளனரா என்பதனை உறுதி செய்வதற்கும் அவர்களது அனைத்து வருமானம் மற்றும் சொத்துக்களை அறிக்கையிட்டுள்ளனரா எனவும் வரிகளின் சரியான தொகைகளை செலுத்தியுள்ளனரா என்பதனை உறுதிசெய்யவும், அவர்களது சொத்துக்கள் மற்றும் வருமானம் மீதான தவகல்களை காலத்திற்கு காலம் தொடர்ந்து மீளாய்வு மற்றும் மதிப்பாய்வு செய்வர். இச் செயன்முறையானது, தங்கள் வரிகளை சரியாக கோப்பிடாத நபர்களை அடையாளம் காண்பதற்கு உதவும். ஆகவே, HWIs அலகானது, HWIs கள் சரியான வரித்தொகைகளை கோப்பிடுவதுடன் அதனை செலுத்துவதை உறுதி செய்யும். HWIs. அலகானது, உயர் வரி இணக்கமின்மையை அடையாளம் காணும் இடங்களில் கணக்காய்வு மற்றும் ஏனைய விசாரணைகளை ஆரம்பிக்கும்.

10- **அவர்கள் கரைகடந்து பணத்தை பதுக்கிவைத்துள்ளார்களா என எவ்வாறு அறிவீர்கள்?**

அ. நாம், வங்கிகள், நிதி புலனாய்வுப் பிரிவு மற்றும் எங்கள் பிராந்திய பங்காளர்களுடன் எமது ஒத்துழைப்பை மேம்படுத்துவோம். இவ் ஒத்துழைப்பினூடாக, சாத்தியமான கரைகடந்த சொத்துக்கள் அடங்களாக சர்வதேச பரிவர்த்தனைகள் மற்றும் வங்கிக் கணக்குகளை அடையாளம் காணக்கூடியதாக இருக்கும். நாம், ஏனைய நாடுகளிலிருந்தான அதிகரிக்கும் எண்ணிக்கையான நன்மைபயக்கும் உரிமைத்துவப் பதிவ்வேடுகள் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட பதிவேடுகளிலிருந்தும் தகவல்களை பெற்றுக்கொள்வோம்.

11- **உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினூடாக செல்வந்தர்கள் விசேட கவனத்தை பெற்றுக்கொள்வார்களா?**

அ. செல்வந்தர்கள் உரிய நேரத்தில் சரியாக கோப்பிடுகின்றார்களா என்பதனை உறுதி செய்ய அவர்களது கோப்புகளை மீளாய்வு

செய்வதில் கவனம் செலுத்தப்படும். HWIs அலகானது, HWIs கள், தங்கள் விபரத்திரட்டுகளில் அறிக்கையிட்டுள்ள தகவல்களை தெளிவுபடுத்துவதற்கும் உள்ளூர் மற்றும் ஏனைய நாடுகளில் அவர்களது சொத்துக்கள் மீதான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் கேள்விக்கொத்துகளை அனுப்புவர். HWIs. அலகானது, HWIs மற்றும் அவர்களது ஆலோசகர்களுடன் சந்திப்பை ஏற்படுத்துவதற்கும் கோப்பிடலின் ஆரம்ப செயற்பாட்டிலேயே ஏற்படக்கூடிய முரண்பாடுகள் அல்லது பிழைகளை அடையாளம் காண உதவுவதற்கும் ஒரு நபரை நியமிக்கும். இது, சிக்கலான வரி சந்தரபபங்களை கலந்துரையாடவும் முன்மொழியப்பட்ட ஏற்பாடுகளின் முறையான வரி செயற்பாடுகளில் வழிகாட்டல்களை பெற்றுக்கொள்ளவும் HWIs களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. HWIs பிரிவின் அதிகரித்த கவனம் செலுத்துகையானது அவர்கள் தங்கள் உண்மையான வரிப் பங்கினை செலுத்துவதற்கு அவர்களது வரி அறிக்கையிடல் மற்றும் கோப்பிடல் கடப்பாடுகளுக்கு அவசியமான இணக்கப்பாட்டினை உறுதி செய்வதாகும்.

12- HWIs **கள், அரசியல் தொடர்புடைய மிகவும் செல்வாக்குடையவர்களாவர். அவர்கள் செலுத்த வேண்டிய தொகையைவிட குறைவான தொகையை செலுத்துவதில் அவர்களின் செல்வாக்கை பயன்படுத்தமாட்டார்கள் என்பதை எவ்வாறு உறுதிசெய்வீர்கள்?**

அ. உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது, கணக்காய்வு நடவடிக்கைகள் மற்றும் (HWIs கோப்புகளுக்கான) முடிவுகளில் ஆலோசனை வழங்க சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து சிரேட்ட அங்கத்தவருடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து சிரேட்ட அங்கத்தவர்களை உள்ளடக்கிய ஆசோசனைக்கு குழு ஒன்றினை தாபிப்பது உள்ளடங்கலாக HWIs கோப்புகளுக்கான கடுமையான ஆளகைக்கான நடவடிக்கைகளை தாபித்துள்ளது.